நாள்.14.10.2025

அசல் வழக்கு எண்.126/2020

வா. சா.1

பெயர். அன்னசெல்வம்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

எனக்கு சொந்தஊர் என்னவென்றால் ஆனைகுளம் ஆகும். வழக்கு சொத்து பாப்பான்குளம் கிராமம், ஆலங்குளத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும், நான் இருக்கும் ஊருக்கும் இடையில் 10 கீ.மீட்டர் தூரம் இருக்குமென்றால் சரிதான். நான் இரண்டு சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துளளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் பொன்னையா நாடார், லெட்சுமண நாடார், இளவரச பெருமாள் நாடார் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து சர்வே எண்.703/2 ஆதியில் 2 ஏக்கர் 99 செண்ட் என்றால் சரிதான்.

மேற்படி 2 ஏக்கர் 99 செண்டை மேற்படி மூன்று நபர்கள் வாய்மொழியாக பிரித்து கொண்டதில் ஒவ்வொரு நபருக்கும் 99 செண்டும் பாத்தியம் என்றால் சரிதான். வழக்கு 1ம் தபசில் சொத்தை பொறுத்து எவ்வித பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். வழக்கு 2ம் தபசில் சொத்து தண்ணீர் பாய்ச்சுவதில் பிரச்சனை என்பதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 1ம் தபசில் சொத்தை தனிப்பட்டாவும், 2ம் தபசில் சொத்தை பொறுத்து கூட்டுப்பட்டாவும் எனக்கு உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி பொன்னையா நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை வழக்கு பிரதிவாதிக்கு வாய்மொழியாக பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதன் படி 2ம் தபசில் சொத்தில் உள்ள கிணற்றில் 1, 2 பிரதிவாதிகளுக்கு கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் இளவரச பெருமாள் நாடாருக்கும் 1/3 பங்கு உள்ளது என்றால் சரிதான். லெட்சுமண நாடார் என்பவரிடமிருந்து சுடலைமுத்து நாடார் வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மேற்படி கிரைய பத்திரத்தை பார்வையிட்டால் கிணற்றில் மின்சார இணைப்பு எனக்கு உண்டா என்பது தெரியவரும் என்றால் சரிதான். எனக்கு மின்சார இணைப்பு இல்லை என்பது தெரியவரும் என்பதால் மேற்படி ஆவணத்தை வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சுடலைமுத்துநாடார் மகன் மலேசியாவில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மலேசியாவில் குடியிருந்து

வருவதால் சந்திரசேகர் என்பவருக்கு வழக்கு சொத்தை பொறுத்து அதிகார ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். நான் சுடலைமுத்து நாடாரின் வாரிசுகளிடமிருந்து தபசில் சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதன் படி தான் மின்இணைப்பு ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, ஏற்கனவே மின்இணைப்பு இருந்தது.

மேற்படி சுடலைமுத்துநாடாரின் பெயரில் உள்ள பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு கிணற்றில் யாருக்கெல்லாம் உரிமை உண்டு என விசாரித்து வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு கிணற்றிற்கான மின்இணைப்பு 1ம் பிரதிவாதியின் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி சுடலைமுத்துநாடார் எப்போது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி சுடலைமுத்துநாடார் 2002ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சுடலைமுத்து நாடார் உயிருடன் இருக்கும் வரை கமலகோர்வை மூலம் நீர் பாய்த்து விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

சுடலைமுத்து நாடார் உயிருடன் இருக்கும் வரை கமலகோர்வைய மூலம் நீர் பாய்த்து தான் விவசாயம் செய்தார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் வாழைபயிர் செய்ததாக பயிர் கணக்கு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நான் தான் 2015லிருந்து பயிர் செய்து வருகிறேன். நான் வாழைபயிர் கணக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு பயிர் செய்திருந்தால் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பயிர் கணக்கு பெற்று தாக்கல் செய்திருப்பேன் என்றாலும்சரியல்ல.

கிணற்றில் தற்போது தண்ணீர் உள்ளதா என்றால் கிடையாது, மழை வந்தால் தண்ணீர் இருக்கும். வழக்கில் 20.08.2020ல் 1ம் பிரதிவாதி என்னை திட்டியதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதற்கு புகார் எதுவும் அளித்தேனா என்றால் கொடுத்தேன். நீதிமன்றம் சென்று தீர்வு காணுமாறு காவல்நிலையத்தில் அறிவுறுத்தப்பட்டது. மேற்படி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி என்னை எதுவும் கூறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யான வழக்குமூலம் உருவாக்கவேண்டும் என்பதற்காக நான் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துளள வழக்கிற்கு பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். 20.07.1977 இளவரபெருமாள்

நாடார், சரவணபெருமாளுக்கு ஒரு ஒத்தி ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஒத்தி ஆவணத்தில் இளவரசபெருமாள் கமலகோர்வை மூலமாக நீர்பாய்த்து விவசாயம்செய்து வருகிறார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி இளவரபெருமாள் காலம் சென்றபிறகு 30.09.1991 அவரது வாரிசுகள் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஆவணத்திலும் கமலகோர்வை மூலம் நீர் பாய்த்து வந்ததாக குறிப்பிடப்பட்டுளளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இரு ஆவணத்திலும் எங்கள் பங்கு 1/3 என்றும், கிணறு ஜலம், கமலகோர்வை ஜலம் முதலியவை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மின் இணைப்பில் அவர்களுக்கு உரிமை இருந்தால் மேற்படி ஆவணங்களில் குறிப்பிட்டு இருப்பார் என்றால் சரியல்ல.

வழக்கில் மின்இணைப்பு பொன்னையா நாடார் பெயரில் உள்ளதாக கூறியுள்ளேன் ஆனால் ஆவணங்கள் எதுவும் அது சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொன்னையா நாடார் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்பதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் பொன்னையா நாடார் மகன் சரவணபெருமாள் பெயரில் மின் இணைப்பு இருந்தது. வழக்கு சொத்திற்கு மின்இணைப்பு எப்போது பெறப்பட்டது என்பதை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 1984ம் வருடமே 1ம் பிரதிவாதி பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதி மற்ற பங்குதாரர்களிடம் கேட்டு தான் மின்இணைப்பு அவர் பெயரில் பெற்றாார் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என கூறுகிறேன் என்றால் சரியல்ல. பொதுகிணற்றில் 20 வருடங்களுக்கு மேலாக தண்ணீர் இல்லை என்றால் சரிதான். கிணற்றில் தண்ணீர் இல்லாததால் 1ம் பிரதிவாதி அவரது இடத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, என்னுடைய வரப்பில் மேற்படி ஆழ்துளை கிணறு அமைத்துள்ளார். 1ம் பிரதிவாதி என்னுடைய வரப்பில் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளதை வழக்கிலோ விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன்.

மேற்படி ஆழ்துளை கிணறை மின் இணைப்பை பயன்படுத்தி தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். பொதுகிணற்றின் மின்இணைப்பை பயன்படுத்தி தனிபட்ட முறையில் 1ம் பிரதிவாதி அவருடைய ஆழ்துளை கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருகிறார் என மின்வாரியத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி புகார் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மின் இணைப்பு 1ம் பிரதிவாதிக்கு

தனிப்பட்டு பாத்தியப்பட்டதால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அதனால் தான் மேற்படி புகார் மனு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

எனது மகன் மின்வாரியத்தில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். அதனால் தான் மின்இணைப்பு விவரங்கள் அனைத்தையும் அவரது அதிகாரத்தை பயன்படுத்தி தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலம் பக்கம் 5ல் உண்மையில் 2ம் தபசில் கிணற்றில் எனக்கு 1/3 பாகமும் பிரதிவாதிகளுக்கு 2/3 பாகமும் உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு 1 பாகமும், 1, 2 பிரதிவாதிகள் அண்ணன் தம்பி என்பதால் அவர்களுக்கு 2 பாகமும் பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன்.

1ம் பிரதிவாதி இளவரச பெருமாள் வாரிசடமிருந்து கிரையம் பெற்றது தெரிந்து தான் 2/3 பாகம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியான செல்லபெருமாள் கிணறற்றில் 1/3 பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி விவசாயம் செய்வதற்கு 3ம் நபரிடமிருந்து தண்ணீர் பெற்று தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தபசில் இடத்தை பார்வையிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும் அவர் தாக்கல் செய்துளள ஆணையர் அறிக்கை பற்றி தெரியுமா என்றால் தெரியும்.

மேற்படி அறிக்கையில் மோட்டார் அறை இடிந்த நிலையில் காணப்பட்டது என்றும், கிணற்றில் தண்ணீர் இல்லை என்றும், கிணற்றில் தண்ணிர் இறைக்க கமலகோர்வையில் கற்கள் காணப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும், கிணற்றில் தண்ணீர் இருந்தது. சரவணபெருமாள் புதிததாக அறை கட்டியுள்ளார் என்றால் சரிதான், அவரது இடத்தில் கட்டியுள்ளார். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் 1ம் பிரதிவாதி தபசில் சொத்தில் கட்டியுள்ள அறை மற்றும் போர்வெல் என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணத்தில் 2ம் புகைப்படத்தில் கமலகோர்வையில் கற்கள் உள்ளது என்றால் சரிதான். எனது இடத்தில் போர்வெல் அமைத்துள்ளதாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனது இடத்தில் அமைத்த போர்வெல்லை அகற்றி தருமாறு வழக்கில் பரிகாரம் எதுவும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான், நேரில் கேட்டதற்கு மிரட்டினார்கள். 1ம் பிரதிவாதி அவருடைய இடத்தில போர்வெல் அமைத்துள்ளார் என்றாலும் நான் என்னுடைய இடத்தில் அமைத்ததாக

வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2ம் தபசில் சொத்தில் உள்ள மின்இணைப்பு 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்பதால் அவரது பெயரில் உள்ளது என்றாலும் சரியல்ல. 2ம் தபசில் சொத்தில் கிணற்றில் தண்ணீர் கிடையாது என்றாலும் அதை பயன்படுத்தி கிரையம் பெற்ற பின்னரும் தற்போதும் நான் விவசாயம் செய்தது கிடையாது என்றாலும் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.